பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (16.10.2024) சென்னை இராஜீவ்காந்தி சாலை, பல்லாவரம், துரைபாக்கம் சாலை, பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வழியாகச் செல்லும் சாலை, சென்னை உள்வட்டச் சாலை, விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் சேதமடைந்த சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை ஆய்வு செய்தார்.

போக்குவரத்துக்கு இடையூறின்றி

சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்!

சேதமடைந்த சாலைகளைப் பார்வையிட்டு அமைச்சர் எ.வ.வேலு உத்தரவு!

சென்னை, அப். 18 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை இராஜீவ்காந்தி சாலை, பல்லாவரம், துரைபாக்கம் சாலை, பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வழியாக செல்லும் சாலை, சென்னை உள்ளவட்ட சாலை விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் சேதமடைந்த சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நேற்று முன்தினம் (16.10.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை தொடர்ந்து கடந்த 2 நாட்களாக பெய்த மழையால் சேதமடைந்த சாலைகளை பார்வையிட்டார்.

நெடுஞ்சாலைத் துறை மூலம் சென்னை பெருநகர மாநகராட்சியில் 270 கி.மீ. சாலைகள், 347 சிறிய மற்றும் பெரிய பாலங்கள், 237 கி.மீ. மழைநீர் வடிகால் அமைப்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், சென்னை இராஜீவ்காந்தி சாலை, குறிப்பாக மத்திய கைலாஷ், SRB டூல்ஸ் சந்திப்பு, காரப்பாக்கம், துரைப்பாக்கம் மற்றும் ஒக்கியம் மடுவு பகுதி களில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் தேங்கியுள்ள மழைநீரை வெளி யேற்றும் நீர்இறைப்பு பணிகளை பார்வையிட்டார். ஒக்கியம் மடுவு பகுதியில் ஏற்கனவே உள்ள 100 மீட்டர் நீளமுள்ள பாலத்தினை, 200 மீட்டர் நீளமுள்ள பாலமாக அமைக்கும் பணியினை பார்வையிட்டார். இந்த பாலப் பணியானது சென்னை மெட்ரோ இரயில் (CMRL) திட்டத் தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பல்லாவரம், துரைபாக்கம் சாலை மற்றும் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வழியாக செல்லும் சாலையில் உள்ள 16 சிறு பாலங்கள் தூர்வாரும் பணியினை பார்வையிட்டார். தில்லை கங்கா நகர் வாகன சுரங்கபாதையில் நீர் இறைக்கும் பணிக்கான 300 HP திறன் கொண்ட மோட்டார் மற்றும் 300 கி.வா. திறன் உள்ள ஜெனரேட்டர் மற்றும் அதன் இயங்கும் திறன் ஆகியவற்றை பார்வையிட்டு, 24X7 முழுநேரமும் கண்காணிப்பில் இருக்க அறிவுறுத்தினார்.

சென்னை உள்வட்ட சாலை விருகம்பாக்கம் நல்லா கால்வாயினை பார்வையிட்டார். இப்பகுதியில் மழைக்காலங்களில் ஓடும் நீர் சாலைமட்டத்தைவிட உயர்ந்து செல்வதால், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. இதனை தவிர்க்க தக்க ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

சென்னை, ஈ.வெ.ரா. சாலையில் சென்னை மாநகர காவல் அலுவலகம், ஆண்ட்ரூ சர்ச் பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம் கட்டி முடிக்கப்பட்ட இணைப்பு கால்வாயும், அதனை தொடர்ந்து இரயில்வே இருப்பு பாதையை கடந்து பக்கிங்காம் கால்வாய் சேரும் வகையில் அமைக்கப்பட்ட பாலத்தினை பார்வையிட்டார்.

வால்டாக்ஸ் சாலையில் சமீபத்தில் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்களை பார்வையிட்டார்.

நெடுஞ்சாலைத் துறை அனைத்து அலுவலர்களும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் தயார் நிலையிலும், கண்காணிப்புடன் இருக்க தக்க அறிவுரை வழங்கினார்.

ஆளுநரின் பதவிக் காலம் தொடர்பாக

ஒன்றிய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்!

புதுக்கோட்டையில் – சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, அக்.18 -

புதுக்கோட்டை மாநகராட்சி பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சியர் அருணா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், மாநகர செயலாளர் ஆ. செந்தில்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப சரவணன், ஆணையர் நாராயணன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

குறிப்பாக புதுக்கோட்டை பால்பண்ணை அருகே உள்ள வரத்து கால்வாயை பார்வையிட்டு ஆய்வு செய்தவர்கள் பெரியார் நகர் பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டு அதிக மழை பெய்தால் தண்ணீர் தேங்காமல் செல்லக்கூடிய அளவிற்கு தோரணை வாய்க்கால்கள் மரத்து கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதையும் பார்வையிட்டனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்:

வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்நிலை ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்றி வருகிறோம், இதில் ஆளுங்கட்சியின் தலையீடு எதுவும் இல்லை. அவ்வாறு இருந்தால் எங்களிடம் தகவல் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆளுநரிடம் மோதல் போக்கு வேண்டாம் என முதல்வர் அறிவுறுத்தி உள்ளதாக தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளது குறித்து பதில் அளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி,

முதல்வர் உயர் கல்வித் துறை அமைச்சரிடம் வேண்டுமானால் அவ்வாறு சொல்லி இருக்கலாம் அதைப்பற்றி எனக்கு தெரியாது என்று கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மீண்டும் கள்ளசாராயம் காய்ச்சப்படுவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்

திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கும். அதனை சட்டம் போட்டு தடுக்குற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்கும், திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று கூறிய அமைச்சர் என்.ரகுபதி , அவ்வாறு இருந்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சும் நபர்களை தமிழ்நாடு அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது என்றும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

இலக்கினை எட்ட பல்வேறு நடவடிக்கைகள்!

கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி விற்பனை: ரூ.100 கோடி இலக்கு!

அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிக்கை!

சென்னை, அக். 18 -

நடப்பாண்டு தீபாவளிக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவன விற்பனை ரூ.100 கோடியாக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்த இலக்கினை அடைய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

இந்தியாவிலேயே மிகப் பெரிய தலைமை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமாக செயல்பட்டு 1,50,000 க்கும் மேற்பட்ட திறன்மிகு கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1,100-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாக சேர்த்து, இந்த சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி இரகங்களை, தமிழ்நாட்டில் 106 மற்றும் வெளி மாநிலங்களில் 44, ஆக மொத்தம் இந்தியா முழுவதும் உள்ள தனது 150 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு ரூ.76.29 கோடி அளவிற்கு விற்பனையை மேற்கொண்டுள்ளது. நடப்பாண்டிற்கு ரூ.100 கோடிக்கு விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையை மூன்னிட்டு புதிய டிசைன்கள் மற்றும் வடிவமைப்புகளில் பட்டு சேலைகள், உயர் ரக பருத்தி சேலைகள், ஆடவருக்கான ஆயத்த சட்டைகள், வேட்டிகள், துண்டுகள் மற்றும் மகளீருக்கான சுடிதாடர் இரகங்கள் போன்ற எண்ணற்ற துணி வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களையும் ஒரே இடத்தில் விற்பனை செய்திட ஒருங்கிணைந்த கைத்தறி வளாக விற்பனை நிலையம் "ஹேண்ட்லூம்ஸ் ஆஃப் இந்தியா" (Handlooms of India) எனும் பெயரில் கோயம்புத்தூரில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

"மெய்நிகர் ஆடை அலங்கார காட்சி மையம்" (Virtual Reality Dressing Centre) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால். 07.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

புதிய இரக அபிவிருத்தி செயல்பாட்டின் ஒரு பகுதியாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் NID/NIFT போன்ற புகழ் பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பகுதி நேர வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்தி, பட்டுப் புடவைகள், பருத்திப் புடவைகள், சுடிதார், லுங்கிகள், துண்டுகள், பெட்ஷீட்கள், ஆயத்த சட்டைகள், கலம்காரி அச்சிடப்பட்ட புடவைகள்/ ஸ்டோல்கள் மற்றும் பெண்கள் நாகரிக ஆடைகள் ஆகியவற்றில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி விற்பனைக்கு காட்சிப்படுத்தி வருகிறது.

இளைய தலைமுறையினை கவரும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் "ஸ்லிம் ஃபிட்" (Slim Fit) ஆயத்த சட்டைகள் பருத்தி Slub நூல், பருத்தி மற்றும் பாலியஸ்டர் blended yarn, பருத்தி twill சட்டைகள் என வாடிக்கையாளர்கள் விரும்பும் விலையில் தொடர்ந்து அறிமுகம் செய்து விற்பனையை உயர்த்தி வருகிறது. மேலும் கைத்தறி நாகரிக பைகள், உதய்பூர் அச்சிட்ட போர்வை இரகங்கள், ஆயத்த சுடிதார் இரகங்களும் விற்பனைக்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

தூய ஜரிகை பட்டு சேலைகளில் உள்ள ஜரிகையின் தரத்தினை உறுதிபடுத்துவதற்காக "ஜரிகை உத்திரவாத அளட்டை" இயற்கை முறையில் பெறப்பட்ட பருத்தி நூலிழைகள் மூலம் தயார் செய்யப்பட்ட குழந்தைகளுக்கான ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நெசவு மேம்பாட்டு திட்டத்தின் கீழ். நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடா பழங்குடியினர். கை வேலைப்பாட்டுடன் தயாரிக்கக் கூடிய எம்பிராய்டரி பொருட்கள் தனித்துவமானது. அவர்களின் சந்தைப்படுத்தல் திறன் நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வரம்புக்குள் மட்டுமே அடங்கியிருந்தது. எனவே பழங்குடி பாரம்பரிய கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள தனது விற்பனை நிலையங்களில் தோடா தயாரிப்புகளான குஷன் கவர்கள், தலையணைகள், படுக்கை விரிப்புகள், பைகள், மேலாடைகள், சால்வை இரகங்கள் மற்றும் பல்வேறு உபயோகங்களுக்கான சிறிய பைகள் போன்றவற்றை விற்பனை செய்து உதவி வருகிறது.

வாடிக்கையாளர்கள் On line மூலம் சமீப ஆண்டுகளில் வீட்டிலிருந்தே தேர்வு செய்து வாங்கும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள தனது 150 விற்பனை நிலையங்கள் மூலம் மின் வணிக விற்பனையை தனது வலைதளமான www.cooptex.gov.in மூலம் விரிவாக்கம் செய்துள்ளது. இந்த முயற்சியின் மூலம் தனது விற்பனை நிலைய சந்தை வாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், புதிய மின்வணிக சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் இணையதளத்தில் சுமார் 30,000 இரகங்கள் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டு இந்த ஆண்டு இது வரை ரூ. 1.00 கோடி மதிப்பிற்கான கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்று ஜூலை 2024-ல் லண்டனில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் செப்டம்பர் 2024-ல் மாஸ்கோவில் நடைபெற்ற ஜவுளி கண்காட்சியில் கலந்து கொண்டு ஆடவர் மற்றும் பெண்களுக்கான ஆடைகள், நவநாகரிக பைகள், கலம்காரி துப்பட்டாக்கள் போன்ற இரகங்களை காட்சிப்படுத்தி வியாபார வாய்ப்புகளுக்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு 2021-ல் பொறுப்பேற்கும் போது, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.7.61 கோடி நட்டத்தில் இயங்கி வந்தது. இத்திட்டத்தினை ஈடுசெய்து 2021-22-ல் நிகர இலாபம் ரூ.9.49 கோடி ஈட்டியுள்ளது. இதனை தொடர்ந்து, 2022-23-ல் ரூ.11.57 கோடியும், 2023-24-ல் ரூ.12.50 கோடியும் நிகர இலாபம் ஈட்டி, தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

இந்தத் தீபாவளி விழாக்கால விற்பனையாக கைத்தறி இரகங்களுக்கு 30% வரை சிறப்பு தள்ளுபடி தமிழ்நாடு அரசின் மூலமாக வழங்கப்பட்டு கோ-ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் விற்பனை நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு, கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள, தரமான கைத்தறி துணிகளை, 30 சதவிகித தள்ளுபடி விலைக்கு வாங்கி, பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளித்து ஊக்குவிக்குமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள அருண் நேரு எம்.பி. அழைப்பு!

பெரம்பலூர், அக் 18 -

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட குளித்தலை, லால்குடி, முசிறி துறையூர், மண்ணச்சநல்லூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 18 வயது முதல் 35 வயது உட்பட்டோருக்கான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை (19.10.2024) காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.

இந்த வேலை வாய்ப்பு முகாமில் 120க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு 20,000க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களுக்கான பணி வாய்ப்புகளை வழங்க உள்ளனர்.

5ம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை ஐ.டி.ஐ., டிப்ளமோ, அக்ரி, நர்சிங், பார்மசி, பி.இ.,

பி.டெக், ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் ஆசிரியர் கல்வி தகுதி உடையவர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

மேலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை பதிவு செய்யப்படும், சுய தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு மாவட்ட தொழில் மையம் தாட்கோ போன்ற நிறுவனங்களின் மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள் சுய தொழில் உருவாக்கும் திட்டத்திற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

கல்வி தகுதிக்கேற்ப குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 10,000 முதல் 25,000 வரை வழங்கும் வகையிலான பணி வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன.

எனவே பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் இந்த வேலை வாய்ப்பு முகாமை பயன்படுத்தி கொள்ளுமாறு பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அருண் நேரு அழைப்பு விடுத்துள்ளார்.

சிந்தனைச் சிகரம் செல்வம் மறைந்தாரே...!

அன்பின் திருஉருவம்! அடக்கத்தின் மறுவடிவம்!
அறிவுப் பெட்டகம் ! எங்கள் செல்வம் அய்யா...
பண்பின் சிகரம் ! பணிவுக்கோர் இமயம்!
பிரிந்தார் என்பதை நம்பவே முடியவில்லை..!

செல்வமாய்க் கிடைத்திட்ட செல்வக் களஞ்சியம்!
சிந்தனைச் சிகரமா? நமைவிட்டு மறைந்தார்!
பல்வேறு ஆற்றலால் நமை வியக்க வைத்தவர்
பறந்துபோன திசைநோக்கி வணங்குகின்றேன்!

அதிர்ந்து பேசிட அறியாத மாமனிதர் எதையும்
அலசியே ஆராய்ந்து அடுத்தஅடி வைப்பார்!
உதிர்ந்து விட்டார் என்பதை உளம்ஏற்த மறுக்கிறது...
ஒவ்வொரு எழுத்துக்களும் நெஞ்செலாம் மணக்கிறது...

"சிலந்தி"யெனும் புனைப்பெயரில் சித்திரங்கள் தீட்டி
சிந்திக்க வைத்தவர்! சீரிய எழுத்தாளர் !
மலைபோல விமர்சனக் கணைகளைத் தொடுத்து
மாற்றாரை திணறடித்து மலைக்கவே வைத்தவர்!

நாகரீகம் பேணிநின்ற நல்லவரின் இழப்பு-தமிழ்
நாட்டுக்கே இழப்பு! நமதருமை முதல்வருக்கு
சோகத்தை தந்துவிட்ட சொல்லொணாப் பேரிழப்பு!
துணைமுதல்வரைப் பாதித்த தாங்கொணாப் பேரிழப்பு...!

முரசொலித்த எழுத்துக்கள் முடங்கியே விட்டது-நாளும்
முழங்கிய மூச்சோ அடங்கியே விட்டது
வரலாறாய் நம்மிடையே வலம் வந்த செல்வம் அய்யா
வாழ்ந்திருப்பார் எப்போதும் கலைஞரைப் போல !

-கவிஞர் இரவிபாரதி

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம், மாதபூண்டி ஊராட்சியில்உள்ள நந்தன் வாய்க்காலில் 5000 பணை விதைகள் நடும் நிகழ்ச்சியை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் முல்லை, ஒன்றிய கவுன்சிலர் முரளி, ஊராட்சி மன்ற தலைவர்மல்லிகா எட்டியான் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஈரோடு மண்டல தொ.மு.ச. நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. ஈரோடு மண்டலத்தின் (பதிவு எண். 56/ ERD, பேரவை இணைப்பு எண். 393) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 10.10.2024 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சி.கருணாநிதி அவர்களை தேர்தல் ஆணையாளராகவும், தலைமைக் கழகத்தின் மேலிடப் பார்வையாளர் வழக்கறிஞர் அ.சரவணன் மேற்பார்வையிலும் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர் - ஜெ.நவநீதகுமார் (பணி எண் 9695)

துணைத் தலைவர்கள்

1) எஸ். கோடீஸ்வரன் (பணி எண் J08709)
2) வி. துரைசாமி (பணி எண் C40291)
3) பி. தியாகராஜன் (பணி எண் 21915)
4) ஆர். சரவணன் (பணி எண் J15607)
5) கே. ஜபருல்லா (பணி எண் C41763)

பொதுச்செயலாளர் -
பி.எஸ்.பாலகுமார் (பணி எண் 9436)

துணைப்பொதுச்செயலாளர் –
ஏ.எஸ்.தங்கராஜ் (பணி எண் 6803)

பொருளாளர் –
எஸ்.கிருஷ்ணமூர்த்தி (பணி எண் 40628)

அமைப்புச் செயலாளர் –
ஏ. வசந்தகுமார் (பணி எண் 43970)

பிரச்சார செயலாளர் –
எம்.தங்கவேலு (பணி எண் 9935)

தலைமைநிலையச் செயலாளர் –
எம்.தங்கராஜ் (பணி எண் C40350)

செயலாளர்கள் –

1) சி.சரவணகுமார் (பணி எண் C40539)
2) எஸ்.செந்தில்குமார் (பணி எண் J08857)
3) டி.மோகனசுந்தரம் (பணி எண் C40890)

இடம்: கலைஞரகம்
நாள்: 16.10.2024

மு.சண்முகம், எம்.பி.
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை